சிஏ/6/1/2/05–II 2024.07.25

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிரூப இலக்கம் - க.மே. 2024/02

அனைத்து கலாசார நிலைய பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கும்

**கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான பிரதிபா – சங்கீத / நடன/ சித்திரப் போட்டி**

**சித்திர சுற்று நிரூபம் - 2024**

**அறிமுகம்**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படும் இப் போட்டி பிரதேச கலாசார மத்திய நிலையங்களில் அறிவினைப் பெறும் மாணவ மாணவியர்களின் ஆக்கத் திறன்களை விருத்தி செய்வதற்கும், வெளியிடுவதற்கும், உயர் கல்விக்காக விண்ணப்பிக்கும் போது முன்னுரிமையை வழங்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றது.

**நோக்கம்**

01. கட்புலனாகும் கலை இரசனையை விருத்தி செய்தல்.
02. இரசனை மற்றும் வர்ணிப்புத் திறனை விருத்தி செய்தல்.
03. எதிர்கால உலகிற்கு பயனுடைய பூரண ஆற்றல் மிக்க பிரஜையை உருவாக்குதல்.
04. ஆக்க பூர்வமான இரசனை மற்றும் கற்பனைத் திறனை விருத்தி செய்தல்.

**ஆலோசனை**

1. பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களும் போட்டி நடைபெறும் தினத்தின்போது கலாசார மத்திய நிலையத்தில் பதிவு செய்து குறைந்தது மூன்று மாதங்களுக்கு மேல் பயிற்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. போட்டி நடைபெறுவதற்கு அண்மித்த காலப் பகுதியில் போட்டிக்காக இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் அல்லது வேறு நிறுவனங்களின் மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிபா போட்டிக்காக மாணவர்களை ஈடுபடுத்தும் போது கலாசார மத்திய நிலையங்களில் பதிவு செய்யப்படாத மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக ஆதாரங்கள் கிடைக்கப் பெறின் குறித்த மத்திய நிலையம் அப் போட்டியில் இருந்து இரத்துச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் பொய்யான தகவல்களை வழங்கும் கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே போட்டியில் இருந்து இரத்துச் செய்யப்படும் கலாசார மத்திய நிலையத்திற்கு முதலாம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணமோ இரண்டாம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணமோ வழங்கப்பட மாட்டாது.

4. பிரதிபா போட்டியானது மாகாண மட்டப் போட்டி மற்றும் தேசிய மட்டப் போட்டி என 02 கட்டங்களாக நடைபெறுவதுடன் மாகாண மட்டப் போட்டியிலே ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் முதலாம் இடம், இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடங்கள் மட்டும் தேசிய மட்டப் போட்டிக்கு உரிய தகுதியைப் பெற்றுக் கொள்வதுடன் தேசிய

மட்டப் போட்டி நடைபெறும் திகதி மற்றும் இடம் தொடர்பாக பின்னர் அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

5. போட்டி முடிவுகளுக்காக சுற்று நிருபத்துடன் அனுப்பப்பட்டுள்ள புள்ளி வழங்கல் முறையே பயன்படுத்தப்படும்.

6. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் சித்திரங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7. எந்தவொரு போட்டிக்காகவும் சமர்ப்பிக்காத கலாசார மத்திய நிலையத்தின் வளவாளர்களுக்கான கொடுப்பனவினை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. மாகாண மட்டத்திற்காக சித்திரங்களைத் தெரிவு செய்வதற்கான மத்திய நிலைய சித்திரப் போட்டி 2024 ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி அந்தந்த கலாசார மத்திய நிலையங்களில் நடாத்துவதற்கு உரியு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

9. போட்டி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.00 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் 4.00 மணி வரையான 06 மணித்தியாலயங்களுக்கு போதுமான காலத்தினை வழங்கி சித்திர ஆக்கத்தினை நிறைவு செய்தல் வேண்டும்.

10. மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் கலாசார மத்திய நிலைய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்கள் 2024 ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் மேம்பாட்டுப் பிரிவிற்கு அனுப்புவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளல் வேண்டும்.

11. சுற்று நிருபம் தொடர்பாக / போட்டி தொடர்பாக ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பின் இது தொடர்பாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அல்லது பொறுப்பு வழங்கப்பட்டுள்ள மேலதிக செயலாளரின் (மேம்பாடு) தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும். அந்த முடிவை சவால் செய்ய முடியாது.

**போட்டி விதிமுறைகள்**

- இப் போட்டிகள் அனைத்து கலாசார மத்திய நிலைய, நிலையப் பொறுப்பு கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மற்றும் கலாசார மத்திய நிலைய சித்திர வளவாளரின் ஆலோசனையின் கீழ் அத்துடன் தங்களினால் தெரிவு செய்யப்படும் சித்திரப் பாடத்தில் விசேட திறமை உள்ளவரையும் உள்ளடக்கிய 03 பேரினைக் கொண்ட குழுவினால் அந்த அந்தப் போட்டிப் பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வெற்றி பெற்ற 05 சித்திர ஆக்கங்களைத் தெரிவு செய்து மாகாண மட்டப் போட்டிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

- இவ் ஆக்கங்களுடன் சித்திர சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை போட்டியாளர்களினால் சரியான முறையில் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

- கலாசார மத்திய நிலையங்களில் போட்டிகள் நடைபெறும் போது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அமைச்சின் உத்தியோகத்தர்கள் திடீர் என மேற்பார்வைக்காக வருகைதர நேரிடலாம் என்பதனால் தாங்கள் வழங்கியுள்ள திகதி மற்றும் நேரத்தில் மாற்றம் ஏற்படுத்தக் கூடாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை சித்திரத்தின் மறு பக்கத்தில் ஒட்டி அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- ஒரு போட்டியாளரினால் தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் ஒரு ஆக்கத்தினை மட்டுமே அனுப்ப முடியும்.

- பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களும் கலாசார மத்திய நிலையத்தில் பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் இது பற்றி சித்திர சுற்று நிருபத்துடன் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை நிலையத்திற்குப் பொறுப்பான கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

- இரண்டு கலாசார மத்திய நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் இருப்பின் போட்டிகளுக்காக ஒரு கலாசார மத்திய நிலையத்தின் மூலம் மாத்திரம் பங்குபற்ற முடியும்.

- அனைத்துப் போட்டிகளிலும் பெற்றுக் கொள்ளும் நிலைகளைக் கருத்தில் கொண்டே வழங்கப்படும் புள்ளிகளைக் கருத்தில் கொண்டு அதிக புள்ளி வீதத்தினைப் பெறும் கலாசார மத்திய நிலையத்திற்காக அதி விசேட விருது இரண்டாம் நிலை புள்ளி வீதத்தினைப் பெறும் கலாசார மத்திய நிலையத்திற்காக விசேட விருதும் வழங்கப்படும்.

**பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள்**

- மாகாண மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் சித்திர ஆக்கங்களில் இருந்து அனைத்து போட்டி பிரிவுகளிலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களிற்காக சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதலாம் இடத்திற்காக 80 புள்ளிகளை விட அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் முதலாம் இடத்திற்கு மட்டும் பதக்கம் வழங்கப்படும். மேலும் அனைத்துப் பிரிவுகளிலும் 05 ஆறுதல் பரிசில்களுக்காக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**போட்டிப் பிரிவுகள்**

சித்திரப் போட்டிகள் கீழ்வருமாறு வயதுப் பிரிவின் அடிப்படையில் 04 பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

| தொடர் இல. | போட்டிப் பிரிவுகள் | வயது |
|---|---|---|
| 01 | ஆரம்பப் பிரிவு | 11 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் ( பிறந்த திகதி 2013.07.01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் இருத்தல் வேண்டும்) |
| 02 | கனிஷ்ட பிரிவு | 11 – 15 வயதிற்கு இடைப்பட்டவர்கள் ( பிறந்த திகதி 2009.06.30 இல் இருந்து 2013.06.30 வரை) |
| 03 | சிரேஷ்ட பிரிவு | 15 – 20 வயதிற்கு இடைப்பட்டவர்கள் ( பிறந்த திகதி 2004.06.30 இல் இருந்து 2009.06.29 வரை) |
| 04 | திறந்த பிரிவு | வயது எல்லைகள் இல்லை |

- 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு உரிய வயது கணக்கிடப்படும்.
- திறந்த பிரிவுப் போட்டியின் கீழ் சித்திரப் போட்டிக்காக கலாசார மத்திய நிலையத்தின் வளவாளர்களுக்கும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது.
- தங்களது கருப் பொருளுக்குரிய ஆக்கத்தினை வெளிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களும் போட்டியாளரே கொண்டுவருதல் வேண்டும்.

**ஊடகம்**

- பெஸ்டல் வர்ணம்
- நீர்ச் சாயம்
- கலவை நிறம்
- கொலாஜ் போன்ற எந்த ஒரு முறையினையும் பயன்படுத்தலாம்.

**அளவு**

- அனைத்து ஆக்கங்களும் 18 x 14 அங்குல அளவு உள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பயன்படுத்தப்படும் ஊடகத்திற்கு அமைய உரிய கடதாசி வகையினைப் பயன்படுத்தலாம்.

## போட்டிப் பிரிவுகளுக்கான கருப் பொருள்

### ஆரம்பப் பிரிவு

1. ஓடுவோம், குதிப்போம் நாங்கள் ஒன்று சேர்ந்து விளையாடுவோம்
2. அம்மா குருவியும் அப்பா குருவியும் குருவிக் குஞ்சுக்கு உணவு கொண்டுவருதல்
3. இந்த ஊர்வலத்தின் அழகு
4. வடிவங்கள் நிறைந்த பட்டம் மேலே செல்லும் விதம்

### கனிஷ்ட பிரிவு

1. வீதியில் கடினமாக உழைக்கும் மதிப்பு மிக்க மக்கள்.
2. எனது சொந்த ஓவியத்தில் எனது சொந்த முகம்.
3. மான் கூட்டம் தண்ணீர் குடிக்க வந்துள்ளது.
4. ‘‘ஹோய்யா ஹோய்யா’’ பெரிய மீன்பிடி வலையை பெரும் முயற்சி செய்து இழுப்போம்.

### சிரேஸ்ட பிரிவு

1. அந்த துன்பம் நிறைந்த பிரியாவிடை
2. வயலில் வேலை செய்து மர நிழலின் கீழ் ஓய்வெடுப்போம்.
3. சிந்திக்க முடியாத அந்த எதிர்பாராத தருணம்.
4. வீதி அமைக்கும் இடத்தில் மக்கள் கடுமையாக உழைக்கின்றார்கள்.

### திறந்த பிரிவு

1. நிறங்கள் மற்றும் வடிவங்கள் உணர்வுகளைக் கொண்டுள்ளன.
2. ஒரு நடன தாளத்தின் தவறான வெளிப்பாடு
3. உழைக்கும் மனிதர்களின் மனித உடலின் ரிதம்
4. ஒரு மேடை நாடகத்தில் பாத்திரங்களுக்கு இடையே உள்ள வெளிப்புற உள் மோதலின் அற்புதமான தருணம்.

**கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான தேசிய சித்திரப் போட்டி – 2024**

01. **ஆரம்பப் பிரிவு**

| **தொடர் இல.** | **நிபந்தனை** | **புள்ளி** |
|---|---|---|
| 01. | மனித உருவம் மற்றும் விலங்கு உருவம் உட்பட அனைத்து வடிவமைப்புக்களும் மேற்பரப்பில் இணைக்கப்பட்டுள்ள விதம் | 20 |
| 02. | வடிவமைப்புக்களின் ஆக்கத் திறன் | 20 |
| 03. | நிறப் பாவனையில் காட்டியுள்ள திறமை | 20 |
| 04. | உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தும் திறன் | 20 |
| 05. | முழு நிறைவு | 20 |

02. **கனிஷ்ட பிரிவு**

| **தொடர் இல.** | **நிபந்தனை** | **புள்ளி** |
|---|---|---|
| 01. | தெரிவு செய்யப்பட்டுள்ள தலைப்பை வெளிப்படுத்தும் போது அதற்குப் பொருத்தமான சூழ்நிலை மற்றும் சுற்று சூழலை வெளிப்படுத்துதல். | 20 |
| 02. | மனித உருவம் மற்றும் விலங்கு உருவம் உட்பட அனைத்து வடிவமைப்புக்களும் மேற்பரப்பில் இணைக்கப்பட்டுள்ள விதம் | 20 |
| 03. | வடிவமைப்பு தொடர்பான அறிவு | 20 |
| 04. | நிறப் பாவனையில் காட்டியுள்ள திறமை | 20 |
| 05. | முழு ஆக்கத் திறனுக்கான நிறைவு | 20 |

03. **சிரேஷ்ட பிரிவு**

| **தொடர் இல.** | **நிபந்தனை** | **புள்ளி** |
|---|---|---|
| 01. | தெரிவு செய்யப்பட்டுள்ள கருப் பொருளை வெளிப்படுத்தும் போது வெவ்வேறு சந்தர்ப்பம், வடிவம், மேற்பரப்பில் பொருந்தும் அணுகு முறைகளை பயன்படுத்துதல். | 20 |
| 02. | தலைப்பிற்குப் பொருந்தக் கூடிய வடிவமைப்பை கட்டியெழுப்பக் கூடிய அறிவு மற்றும் ஆக்கத் தன்மை. | 20 |
| 03. | நிறப் பாவனையில் கலைஞர் காட்டியுள்ள கலைத் திறமை | 20 |
| 04. | தலைப்புக்கு பொருந்திய சூழ்நிலை மற்றும் சுற்று சூழலை வெளிப்படுத்துதல் | 20 |
| 05. | உணர்வு, சமூக வெளிப்பாடு மற்றும் ஆக்கத் திறன் மிக்க முழு நிறைவு | 20 |

**திலக் நந்தன ஹெட்டிஆரச்சி**
மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு)

**கை/இட்டது எச்.எம்.பி.பீ.ஹேரத்**
செயலாளர்
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

**பிரதிபா 2024**

**கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான**

**<u>மாகாண, தேசிய மட்ட சித்திரப் போட்டி</u>**

**விண்ணப்பதாரியின் விபரம்**

01. முழுப் பெயர் (தமிழில்) :-……………………………………........
ஆங்கிலத்தில் :-.............................................................
02. முகவரி :-……………………………………………
03. ஆண் / பெண் :-……………………………………………
04. பிறந்த திகதி :-……………………………….…………
05. 2024.06.30 ஆம் திகதி வயது :-………………………………..…………
06. பங்குபற்றும் போட்டிப் பிரிவு :-……………………………………………..
07. தலைப்பு :-……………………………………………..
08. பதிவு இலக்கம் :-……………………………………………..

**கலாசார மத்திய நிலைய விபரம்**

09. கலாசார மத்திய நிலையத்தின் பெயர் :-……………………………………………
10. கலாசர மத்திய நிலையத்தின் முகவரி :- …………………………………….……..
11. தொலைபேசி இலக்கம் - மத்திய நிலையம் :-……………………………….…………
கைபேசி :-……….……………………………….............
12. கலாசார மத்திய நிலையம் உரித்தான
01. பிரதேச செயலாளர் பிரிவு :-………………………………………...……..
02. மாவட்டம் :-…………………………………..…..……..
03. மாகாணம் :-……………….…………………………….

13. சித்திர ஆக்கத்தினை பயிற்றுவித்த வளவாளர்களின் பெயர் கையொப்பம்

………………………………………………………………… ………………

மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை எனவும் மற்றும் இதனுடன் போட்டிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சித்திரம் அவரினால் எனது மேற்பார்வையின் கீழ் வரையப்பட்டது என உறுதிப்படுத்துகின்றேன்

நிலைய பொறுப்பான கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தரின் பெயர் கையொப்பம்

……………………………………………………………….. …………..

திகதி :-

பதவி முத்திரை